கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 01.04.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "டீப் டைவ் இன்டூ பிசினஸ் மாடல் கேன்வாஸ்" ஒரு நாள் பயிற்சி**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ஈ–யுவா (E–YUVA) மையம் வேளாண் பல்கலையின் பிரிவு 8 நிறுவனமான காஸ்பிட்டுடன் (COXBIT) இணைந்து மார்ச் 29, 2025 அன்று "டீப் டைவ் இன்டு பிசினஸ் மாடல் கேன்வாஸ்" என்ற தலைப்பில் ஒரு நாள் தொழில்முனைவோர் பயிற்சியை நடத்தியது. பிசினஸ் மாடல் கேன்வாஸ் என்பது தொழில்முனைவோராக விரும்பும் ஒவ்வொரு நபரும் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான கருவியாகும். தமிழ்நாடு அரசின் ஸ்டார்ட்டப் தமிழ்நாடு (StartupTN) துணைத் தலைவர் திரு.தினேஷ் குமார் சுந்தரவேலு, பிசினஸ் மாடல் கேன்வாஸ் கருவியின் பகுதியைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் பல்வேறு கல்லூரிகளில் இருந்து இருபது மாணவர்கள் இந்த பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர். மாணவர்கள் பட்டறையின் கற்றல்களுடன், தங்கள் வணிக யுக்திகளை புகுத்தி நூதன விதை வீரியம் ஏற்றும் முலாம் பூச்சு 'பயோகோல்ட்', உலர் பூச்செண்டு 'எவர்ப்லூம்' மற்றும் பாரம்பரிய அரிசிமாவு சார்ந்த மிட்டாய் 'ஹெல்த்தி பைட்ஸ்' போன்ற சில சுவாரஸ்யமான தயாரிப்புகளை முன் மொழிந்தனர்.

பயிற்சியின் தொடக்கத்தில், பேராசிரியர் மற்றும் தலைவர் (தாவர உயிரி தொழில்நுட்பத் துறை) முனைவர் ஈ.கோகிலாதேவி அவர்கள் பங்கேற்பாளர்களை வரவேற்றார். (தாவர உயிரி தொழில்நுட்பத் துறை) மூத்த பேராசிரியர் முனைவர் எஸ்.மோகன்குமார் அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார். தனது தொடக்க உரையில், நேச்சுரல்ஸ், கீரைக்கடை.காம், டீ பாய் பிரான்சைஸ் போன்ற அன்றாட வாழ்வில் நாம் காணும் ஏராளமான வெற்றிகரமான தொழில்முனைவோரை மேற்கோள் காட்டி, மாணவர்களை புதுமையாக சிந்திக்கவும், தொழில்முனைவோரின் பாதையில் நம்பிக்கையுடன் முன்னேறவும் ஊக்கப்படுத்தினார். பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எல். அருள் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**